2 பாடம்

# நீண்ட பயணம்

*புதிய ஊருக்குச் செல்ல எலனுக்குப் பிடிக்கவில்லை; அப்பாவின் சட்டையைப் பற்றியபடி, "தேவன்தாம் அங்கே போகச் சொன்னார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள். அப்படியானால், சொந்த தேசத்தை விட்டுவிட்டு வா என்று தேவன் சொன்னபோது ஆபிரகாமுக்கு எப்படி இருந்திருக்கும்?*

ஆபிராம் தேவனுடன் மிகவும் நெருங்கி வாழ்ந்து வந்தார். தினமும் ஜெபத்தின் மூலமாகத் தேவனுடன் உறவாடினார். தேவன் என்ன சொன்னாலும் செய்ய ஆயத்தமாயிருந்தார்.

தேவன் ஒருநாள் ஆபிராமிடம், "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும்,உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்றார்.

ஆபிராம் வாயடைத்துப் போனார். 'எதற்காக நான் இங்கிருந்து போகவேண்டும்?' என்று மனதிற்குள் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே, ஆபிராமுடனே தேவன் தொடர்ந்து பேசலானார். "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப்பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய். நான் உனக்குப்பிள்ளைகளையும்பேரப் பிள்ளைகளையும் கொள்ளுப் பேரப்பிள்ளைகளையும்தருவேன்; உன் சந்ததி மிகவும் பெரிதாயிருக்கும்"என்றார்.



இதைக் கேட்ட மாத்திரத்தில் ஆபிராமுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. எனக்கும் என் மனைவிக்கும் மிகவும்வயதாகி விட்டது. இன்னும் ஒரு பிள்ளை கூடப் பிறக்கவில்லை; அப்படியிருக்கப்பேரப் பிள்ளை களும் கொள்ளுப் பேரப்பிள்ளைகளும்

**மனன வசனம்**

**யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். ஏசாயா 6:8.**

கிடைப்பது எவ்வாறு என்று குழம்பினார்.

ஆனாலும் தேவன் கூறிய வாறே செல்லத்தயாரானார். வேலைக்காரர்களின்உதவியுடன் வீட்டுப்பொருட்களை மூட்டைகளில் சேகரித்தார்.

ஆபிராம் தன்னுடன் வருப வர்களையெல்லாம் அன்புடன் அழைத்தார். ஆபிராமுடைய அண்ணன் மகன் லோத்துவும் ஆபிராமின் வேலையாட்களும் ஆபிராமுடனே புறப்பட்டுச் சென்றனர். மெய்யான தேவனைப்பற்றி ஆபிராமின் மூலம் வேலையாட்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். எனவே, மிகுந்த மகிழ்வுடன் புறப்பட்டுச் சென்றனர். ஆபிராமின் கழுதைகளையும் ஒட்டகங்களையும் நடத்திச் சென்றனர்.

பெண்களும் ஆண்களும் சிறுகுழந்தைகளுமாகப் புழுதி படிந்த அந்தப் பாதைகளில் நடந்துவந்தனர். வெயில் சுள் ளென அடித்ததாலும் வெகு நேரம் நடந்து கொண்டேயிருந்த தாலும் பிள்ளைகள் சோர்வா யினர். இருப்பினும் பயணம் தொடர்ந்தது.

கானான் தேசத்தில், சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபத்தி லுள்ள மோரே என்னும் சம பூமிக்கு வந்தார்கள். ஆபிரா மின் கட்டளைப்படியே அங்கு வேலையாட்கள் கூடாரங்கள் பல அமைத்தார்கள்.

ஆபிராம் சுற்றுமுற்றும் பார்த் தார். அகன்ற பசுமைமிக்கப் பள்ளத்தாக்குகளும்,அருமையான குன்றுகளும், ஒலிவமரங்களும், அத்திமரங்களும்,குளிர்ந்தநீரூற்று களும் அங்கே நிறைந்திருந்தன. அக்காட்சிகண்களுக்குவிருந்தாக இருந்தது. மரங்களுக்கு நடுவிலே ஆபிராம் கண்ட ஒரு காட்சி அவருக்குவேதனையாக இருந்தது. அங்கே சிலைவழி பாட்டுக்குரிய பலிபீடங்கள்



## செய்தி

**சேவைசெய்ய தேவன் என்னை அழைக்கும்போது, நான் கீழ்ப்படிவேன்.**

காணப்பட்டன.

உடனடியாக ஆபிராம் தனது வேலையாட்களின் உதவியுடன் கற்களைச் சேகரித்தார். நல்ல சுகமாகத் தங்களது நீண்ட பயணத்தை முடிக்க உதவிய தேவனுக்கு ஆபிராம் நன்றிசொல்ல விரும்பினார்.

விரைவிலேயே ஒரு பலிபீடத்தைஅமைத்தார்.தேவன் சொல்லியபடியே ஆபிராம் பலிபீடத்தில் தேவனுக்குப் பலி செலுத்தி தேவனை மகிமைப் படுத்தினார்.

குடும்பத்தினருடனே உடன்வந்த உறவினர்களும் வேலையாட்களும்கூடஅந்தப் பலிஆராதனையில் கலந்துகொண்டு தேவனை உண்மையாகத் துதித்தார்கள்.

என் கண்ணே! ஆபிராம் போன்று தேவன் என்ன சொன்னாலும் உடனே நாம் கீழ்ப் படியவேண்டும். அந்தக் கீழ்ப்படிதல் நம் வாழ்வில் நமக்கு மிகவும் அவசியம்.

நமக்காக உயிரைத் தந்த தேவனுக்கு நமது அன்பைக் கொடுப்போமா?

**செய்முறை:** *ஆபிரகாம் அவருடைய குடும்பத்தைக் கானானுக்கு வழிநடத்திச் செல்ல வழிகாட்டி உதவு. அவருடைய புதுவீட்டைச் சென்றடைய ஒரே ஒரு வழிதான் உள்ளது.*

### புதிர் 2

